| | | | |
|---|---|---|---|
| 31.03.2022 | அசல் வழக்கு எண்.35/2018 | வா .சா.2 | திரு.ஜெயராஜன் த/பெ.கிருஷ்ணசாமி கவுடர் |

சாட்சி மீண்டும் திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

குறுக்கு விசாரணை (1ம் பிரதிவாதி தரப்பில்)

நான் தாக்கல் செய்துள்ள ஆவணம் யாரால் வாங்கி வரப்பட்டது என்றால், ராஜப்பன் மற்றும் நிலத்தை வாங்கும் மற்ற நபர்கள் 29 பேர் வாங்கி வந்தார்கள். வா சா ஆ 5 ஆவணத்தில் முதல் பக்கத்தில் ராஜப்பன் மற்றும் சோலைய கவுடர் ஆகியோரின் பெயர் இல்லை என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் எழுதியவர் என்ற இடத்தில் நான் கையெழுத்து போடவில்லை அதில் சாட்சி கையெழுத்துபோட்டுள்ளது நான்தான். எழுதியதும் நான் தான். க.ச எண். 515 /2 ல் சொத்து விபரத்தில் செக்குபந்தி குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். ரூ. 7,11,000/- தொகையில் அட்வான்சாக ரூ., 25,000 த்தை நான் தான் 10.09.2014 ம் தேதியில் வாங்கி முதல் பிரதிவாதியிடம் கொடுத்ததாக சொல்லியிருக்கிறேன். மீதி தொகையை நான் வாங்கி கொடுத்ததாக சொல்லவில்லை. இரண்டாவது அக்ரிமெண்ட் போடும்போது நான் அங்கு இல்லை. நான் கல்லூரிக்கு போய் விட்டேன். அந்த பணம் ரூ. 4,75,000/-த்தை என்னிடம் கொண்டு வந்து என் வீட்டில் சோலைய கவுடரும் அவர் மகன் நடராஜனும் கொண்டு வந்து கொடுத்தார்கள். வா சா ஆ 5 ஆவணத்தில் தென்புறமாக முத்துக்கல்லூர் அன்சூர் ரோடு வரை செல்லும் தென்வடல் வண்டித்தடத்தில் குழாய் அமைத்துக் கொள்ளும் உரிமை சகிதம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வா சா ஆ 5 ஒப்பந்தத்திற்கு பிறகு தான் இரண்டாவது அக்ரிமெண்ட் போடப்பட்டதா என்றால் ஆமாம். 12.09.2014 ம் தேதியன்று பத்திரத்தில் கண்ட சாட்சிகள் முன்னிலையில் தான் சோலைய கவுடரிடம் 5 லட்சம் ரூபாய் முழுவதுமாக கொடுக்கப்பட்டது என்பது சரியா தவறா என்றால், அது தவறு. ஏற்கனவே 25,000 பணம் முதல் அக்ரிமெண்ட்ல் கொடுக்கப்பட்டது. இரண்டாவது அக்ரிமெண்ட்ல் என்ன எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது. வா சா ஆ 1 ஒப்பந்தத்தில் சொத்து விபரத்தில் கண்ட பள்ளவாரி என்பது சோலைய கவுடரின் பூமிக்கு வடபுறமுள்ள ஓடை என்றால் சரிதான். உண்மையிலேயே வா சா ஆ 5 வா சா ஆ 1 க்கு முன்பு நான் சொன்ன தேதியில்

எழுதப்பட்டிருந்தால் சொத்து விபரத்தில் தென்வடல் தடத்தில் குழாய் பதிக்கும் உரிமை பற்றி வா சா ஆ 1ல் எழுதியிருப்பார்கள் என்றால், இரண்டாவது ஒப்பந்தத்தில் பள்ளவாரி என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். 12.09.2014 ல் சோலைய கவுடருடன் ஒப்பந்தம் போட்டார்கள் என்றும், அவ்வாறு ஒப்பந்தம் போட்டவர்கள் என் வீட்டிற்கு வந்தார்கள் என்றும் சொல்லியிருக்கிறேன். அவர்களில் எத்தனை பேர் என்னுடைய உறவினர்கள் என்றால், முதல் சாட்சியான பழனியப்ப கவுடர் என்னுடைய பெரியப்பா மகன் ஆவார். வெள்ளியங்கிரி பி ராஜப்பன் என் உறவினரா என்றால் இருவரும் என் நண்பர்கள். ஒப்பந்தத்தில் கண்ட பெரும்பாலானவர்கள் என் நண்பர்கள் என்றால், நண்பர்களாகவும்இருக்கலாம், இல்லாமலும் இருக்கலாம். நான் எழுதிய வா சா ஆ 5 ஒப்பந்தம் எந்த தேதியில் எழுதப்பட்டது என்று தேதி குறிப்பிடப்படவில்லை என்றால் தேதி குறிப்பிடப்படவில்லை. அதில் முதல் பக்கத்தில் 1 இலக்கமிட்டவர் ராஜப்பன் என எழுதியிருக்கிறோம். இரண்டாவது பக்கத்தில் 1 இலக்கமிட்டவர் என யார் கையெழுத்து போட்டுள்ளார்கள் என்றால் சோலைய கவுடர் கையெழுத்து போட்டுள்ளார். 2ம் இலக்கமிட்டவர் என்ற இடத்தில் ராஜப்பன் கையெழுத்து போட்டிருக்கிறார். 2ம் பக்கத்தில் உள்ள சோலைய கவுடர் என்ற கையெழுத்து சோலைய கவுடரின் கையெழுத்து அல்ல என்றால்,கையெழுத்து பரிசோதனைக்கு அனுப்பி தெரிந்து கொள்ளலாம். பிரபாகரன் மற்றும் குருந்தாசல மூர்த்தி ஆகியோரின் கையெழுத்துக்களே அல்ல என்றால் சரியல்ல. அவர்கள் சாட்சிகள். அவர்கள் எல்லோரும் அங்கு இருந்தார்கள். கையெழுத்து போட்டார்கள். இந்த வழக்கில் நான் சாட்சியாக இருந்ததாகவோ 10.09.2014 ல் ஒரு ஒப்பந்தம் போடப்பட்டதாகவோ வாதிகள் தம்முடைய வழக்கில் எந்த இடத்திலும் வாதுரைக்கவில்லை என்றாலும் அந்த சூழ்நிலையில் வழக்கில் வா சா ஆ 1 ஆவணம் பொய்யானது என பிரதிவாதிகள் தரப்பில் வா சா ஆ குறுக்கு விசாரணையில் நிரூபிக்கப்பட்ட பிறகு வா சா ஆ 5 ஆவணத்தை பொய்யாக தயாரித்து இருக்கிறோம் என்றால் சரியல்ல. அது உண்மையான ஆவணம். விற்கிரைய ஒப்பந்தம் ஏற்பட்டால் அந்த தேதியில் அது பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்ள ன்ற விபரம் எனக்கு தெரியும். வா சா ஆ 5 ஆவணத்தை நாங்கள் பதிவுக்கு கொண்டுசெல்லவில்லை என்றால், அதை எழுதியது மட்டும் நான் அவர்கள் பதிவு செய்ய கொண்டு போனார்களா என்று எனக்கு தெரியாது. என்னுடைய வீடும் சோலைய கவுடர் வீடும் சுமார் 1கி.மீட்டார் இடைவெளியில் இருக்கிறது. 2ம் பிரதிவாதி ரவிச்சந்திரன்

என்னுடைய தாய்மாமா மகன் மற்றும் 3ம் பிரதிவாதி முருகேசன் என்னுடைய நண்பர். சோலைய கவுடரிடம் 5 லட்சம் கொடுத்திருந்தால், 2, 3 பிரதிவாதிகள் முன் பணத்தை வாதிகளிடமிருந்து திரும்ப பெற்றிருக்க முடியாது என்றால், அது பற்றி எனக்கு தெரியாது. கொடுத்ததாக கூறப்படும் முன் பணம் வாதிகளிடமே இருந்திருக்கிறது என்றாலும் சோலைய கவுடரிடம் கொடுக்கப்பட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் தவறு. வா சா ஆ 5 ஆவணத்தில் முதல் பக்கத்தில் ஏன் சோலைய கவுடரிடம் கையொப்பம் பெறப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு பத்திரம் எழுத தெரியாது எனவும் ஆவண எழுத்தரை வைத்து எழுதி கொள்ளலாம் என்று சொன்னேனா என்றால், அந்த இடத்தில் எழுதத் தெரிந்த நபர் நான் என்பதால் எழுதினேன். சோலைய கவுடர் பூமிக்கு வடபுறமுள்ள பள்ளவாரியில் அத்திக்கடவு அவினாசி சுத்திகரிப்பு நிலையத்தில் இருந்து வரும் கழிவு நீர் வரும் என்றால் சரிதான். அந்த ஓடையில் வரும் தண்ணீரை வருவாய் துறையினர் அனுமதி இ,ல்லாமல் எடுக்கக்கூடாது என்பது எனக்கு தெரியும். ஆனால் விவசாயிகள் என்பதால் விட்டு விடுகிறார்கள். வருவாய் துறையினர் விவசாயிகளை தண்ணீர் எடுக்க அனுமதிப்பதாக நான் வழக்கிற்காக பின் யோசனையிட்டு சொல்கிறேன் என்றாலும் அது சட்ட விரோதமான செயல் என்றால், இஞ்சின் வைத்து ஓடையில் இருந்து தண்ணீர் எடுக்கிறார்கள். அது உண்மையில் நடப்பது தான். அவ்வாறு என்ஜின் வைத்து ஓடையில்இருந்து தண்ணீர் எடுப்பவர்களை வருவாய் துறையினர் அவ்வப்போது அகற்றி விடுவார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னுடைய முதல் வாக்குமூலத்தில் சோலைய கவுடரிடம் 5 செண்ட் இடத்தை ரூ. 7,11000 த்திற்கு வாதிகள் விலைபேசியதாக சொல்வது தவறு என்றாலும், நான் அதற்கு சாட்சியாக இருந்தேன் என்று சொல்வது தவறு என்றாலும் சரியல்ல. வா சா ஆ 1 ஆவணத்திற்கு எதிராகவும் வாதிகளின் வழக்கிற்கு எதிராகவும் நான் சாட்சியாக இருந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் தவறு. அவ்வாறு பொய் சொல்ல வேண்டிய அவசியம் எனக்கு இல்லை. இரண்டவாது ஒப்பந்தம் போடப்பட்ட பிறகு சோலைய கவுடர் மற்றும் நடராஜன் என்னிடம் ரூபாய் 4,75,000 த்தை கொடுதது வைத்தார்கள் என நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. பத்திரம் எழுதும்போது விலை பேசும் போதும் சோலைய கவுடரும் அவர் மகன் நடராஜனும் வந்ததாக சொல்லியிருக்கிறேன் என்றால், ஒப்பந்தம் போடப்பட்டதே சோலைய கவுடர் வீட்டில்

தான். சோலைய கவுடர் மகன் நடராஜன் மற்றும் கோவிந்தராஜனிடம் சாட்சி கையெழுத்து வாங்கினோமா என்றால், இல்லை. சோலைய கவுடர் வீட்டில் வைத்து தான் 10.09.2014 ல் வா சா ஆ 5 தயாரிக்கப்பட்டதாக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சோலைய கவுடரின் மகன் கோவிந்தராஜன் என்பவர் உடல் ஊனமுற்றவர் என்றால் சரிதான். அவரால்வேகமாக நடக்க முடியாது என்றால் சரிதான். சோலைய கவுடரின் மகன் கோவிந்தராஜன் ஜே சி பி வைத்து குழாய்களை உடைத்து தென்னங்கன்றுகளை அங்கு வைத்து விட்டார் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால்சரியல்ல. அவரால் வேகமாக நடக்கத்தான் நடக்க முடியாது. ஜே சி பி வைத்து விவசாயம் செய்கிறார். அது சம்பந்தமாக காவல் நிலையத்தில்புகார் கொடுக்கப்பட்டது. வாதிகள் புகார் கொடுத்ததாக சொல்லும் சமயத்தில் நான் காவல் நிலையம் செல்லவில்லை. எனக்கு அந்த விபரம் பின்னிட்டு தான் தெரிய வந்தது. அதன் பின்னிட்டு சோலைய கவுடர் வீட்டிற்கு போனதாகவும் அவர் பணம் அதிகமாக கேட்டதாகவும் நான் சொல்லியிருக்கிறேன் என்றால், காவல் நிலையத்திற்கு போவதற்கு முன்பே அந்த சம்பவம் நடந்து விட்டது. 10 செண்ட் 6 லட்சத்திற்கு எங்கே வாங்கினேன் என்றால் ராமசாமி கவுடரிடம் வாங்கினேன். அவரும் ஒரு பெரியப்பா மகன் ஆவார். அந்த பூமி சோலைய கவுடரிடம் வாங்கியதல்ல என்றால் சரியல்ல. அந்த 10 செண்ட் பூமியில் இருந்து நான் என்னுடைய தோட்டத்திற்கு தண்ணீர் கொண்டு செல்கிறேனா என்றால் அந்த நிலத்தில் கிணறு வெட்டிபோர்போட்டு தண்ணீர் எடுத்து செல்கிறேன். சுமார் 750 மீட்டர் தள்ளி தண்ணீர் கொண்டு போகிறேன். 2 ம் பிரதிவாதி ரவிசந்திரன் மற்றும் 3 ம் பிரதிவாதி முருகேசன் சோலைய கவுடரின் பூமிக்கு தென்புறமாக உள்ள பூமியின் பங்குதாரர்கள் என்றால் அருகாமையில் இருப்பவர்கள். தென்வடல் வண்டித்தடம் 2,3 பிரதிவாதிகளின் பூமி வழியாக தான் ரோட்டிற்கு வந்து சேரும் என்றால் அவ்வாறு வர வாய்ப்பில்லை. சோலைய கவுடரின் பூமியை ஏற்கனவே பாகம் பங்கி அவர் மகன்கள் நடராஜன் மற்றும்கோவிந்தராஜன் பாகம் செய்து அனுபவித்து வருகிறார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சோலைய கவுடர் 3 லட்சம் அதிகமாக கேட்டதாகவும் நான் 1 லட்சம் ரூபாய் பெற்றுக் கொள்ள சொல்லி சமாதானம் பேசியதாகவும் அதை சோலைய கவுடர் ஒப்புக்கொள்ளவில்லை என்று முதல்விசாரணையில் சொல்லியிருந்தால் அது தவறு.கோவிந்தராஜ் தான் ஒப்புக்கொள்ளவில்லை. வா சா ஆ 5 ஒப்பந்ததில் கோவிந்தராஜன் தரப்பினரா என்றால் இல்லை. அவர் வா சா ஆ 5 ல்

கையெழுத்து போடவில்லை. இந்த வழக்கில் வாதி தரப்பு சாட்சி 1 விசாரிக்கப்பட்ட பிறகு நான் வாதிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து பழைய தேதியிட்ட முத்திரை தாளில் வா சா ஆ 5 ஐ தயாரித்திருக்கிறோம் என்றால் பொய். முத்திரைத்தாள் எண். 04 ஏபி 212440 என்பதில் 12.09.2014 அன்று எஸ்.சிவசங்கரி என்ற முத்திரைத்தாள் விற்பனையாளரிடம் பெறப்பட்ட தாளில் 2,3 பிரதிவாதிகளால் சோலைய கவுடரிடம் ரேகையும் கையொப்பமும் பெற்று தென்வடல் சம்பந்தமாக சோலைய கவுடருக்கு தெரியாமல் ஒரு ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டது என்றால் அது தவறு. அதை காரமடை காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டபோது அது பொய்யான ஆவணம் என்று சோலைய கவுடர் மற்றும் கோவிந்தராஜன் ஆகியோர்கள் பேசினார்கள் என்றாலும் அதனால் தான் அந்த ஆவணத்தில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தென்வடல் வண்டித்தடம் சம்பந்தமாக வா சா ஆ 1 ஒப்பந்தத்திலும் வழக்கிலும் குறிப்பிடப்படவில்லை என்றாலும் அந்த குறையை நிவர்த்தி செயவதற்காக ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரி இந்த வழக்கில் வா சா ஆ 5 ஒப்பந்தம் சோலைய கவுடரின் கையெழுத்து இல்லாமல் போலியாக தயாரிக்கப்பட்டுள்ளது என்றால் தவறு. வா சா ஆ 5 ஆவணத்தில் சோலைய கவுடர் கையெழுத்து போட்டிருக்கிறார். வா சா ஆ 5 ல் 18ம் வாதி ஆர் ராஜப்பன்( 2ம் இலக்கமிட்ட) கையெழுத்து மற்றும் 2ம் இலக்கமிட்ட சாட்சி கையெழுத்தான என்னுடைய கையெழுத்து தவிர மற்ற கையெழுத்து அனைத்தும் போலியானவை என்றால் தவறு. வா சா ஆ 5 ஒப்பந்தத்தில் 3,4,5 என குறிப்பிடப்பட்டுள்ள சாட்சி கையெழுத்துக்கள் வாதிகள் பெயரில் உள்ளவை என்றால் சரிதான். இந்த ஒப்பந்தத்தை பொறுத்து கையெழுத்து நிபுணர் பரிசோதனைக்கு அனுப்ப எனக்கு எந்த ஆட்சேபணையும்இல்லை. இந்த ஒப்பந்தம் போலியானது என நிரூபிக்கப்பட்டால் என் மீது குற்றவியல் நடவடிக்கைக்கு பரிந்துரைக்கப்படும் என்றால், எனக்கு எந்த ஆட்சேபணையும்இல்லை. அதை எழுதியது நான் தான். எனது சாட்சியம் முழுவதும் வாதிகளின் வாதுரைக்கும் வா சா 1ன் சாட்சியத்திற்கும் முரணாக இருக்கிறது என்றால் சரியல்ல. வா சா ஆ 5 ஆவணத்தை நீதிமன்றத்திற்கு வரும்போது நான் கொண்டு வரவில்லை. வா சா ஆ 5 ஆவணம் யார் பெயரில் வாங்கப்பட்டுள்ளது என்றால் செல்வம் த/பெ. சுப்பைய கவுடர் தோலம்பாளையம் என்பவர் பெயரில் வாங்கப்பட்டுள்ளது. மேற்படி செல்வம் இந்த வழக்கில் ஒரு வாதி என்றால்,, அது பற்றி எனக்கு தெரியாது. முத்திரைத்தாள் விற்பனையாளரிடம்

10.09.2014 ல் மேற்படி முத்திரைத்தாள்கள் வாங்கப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா சா ஆ 5 ஆவணத்தை நான் எழுதியதற்கு பின்னிட்டு அந்த ஆவணத்தை யார் வைத்திருந்தார்கள் என்று எனக்கு தெரியாது. அதில் கையொப்பம் செய்ததாக கூறும்நபர் யாரும் தேதி போடவில்லை என்றால் சரிதான். வா சா ஆ 5 எழுதப்பட்ட முத்திரைத்தாளை யார் வாங்கினார்கள் என்று கருவூலத்தில் விசாரித்தால் தெரியவரும் என்றால் சரிதான். வாதிகள் அனைவரும் பேசப்பட்ட மீத தொகையை கொடுக்க தயாராக இருந்தார்கள் என நான் சொல்லிஉள்ளது தவறு என்றாலும் எனக்கு அதைப்பற்றி நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரியல்ல. அவர்கள் பதிவு செய்ய தய ராக இருந்தார்கள் . அசல் ஆவணம் இல்லாததால்பதிவு செய்ய முடியவில்லை. அசல் ஆவண ம் இல்லாததால் பதிவு செய்ய முடியவில்லை என நான் சொல்வது வாதிகள் சொல்லி கொடுத்தபடி நான் சொல்லும் ஜோடிக்கப்பட்ட சங்கதி என்றால் தவறு. நான் முழுக்க முழுக்க வாதிகளுக்கு வேண்டப்பட்ட விருப்புள்ள சாட்சி என்றால் தவறு. எனக்கு சோலைய கவுடர், நடராஜன் மற்றும் கோவிந்தராஜன் ஆகியோருக்கிடையில் நல்ல உறவுமுறை இல்லை என்றால் இந்த நிகழ்ச்சிக்கு பிறகு நல்ல உறவு முறை ,இல்லை. , வாச ா ஆ 5 ஒப்பந்தம் போலியானது என்றாலும் என் முன்னிலையில் ஒப்பந்தம் பேசப்பட்டு முன் பணம் வாங்கப்பட்டது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் தவறு. சோலைய கவுடர் 3 லட்சம் கேட்டதாகவும் ஒரு லட்சத்திற்கு பேரம் பேசப்பட்டதாகவும் அதற்கு சோலைய கவுடர் ஒப்புக்கொண்டார் என் பொய்யாக சொல்கிறேன் என்றால் தவறு. என்னுடைய சாட்சியம் முழுக்க முழுக்க நிராகரிக்கப்பட்டது என்றால் தவறு. என்னுடைய சாட்சியம் சட்டப்படி தவறானது என்றால் சரியல்ல.

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

Sd/-S.Indulatha,

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.

SUB COURT, METTUPALAYAM